Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 77/2023**

**Deposition of PW.1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பொன்ராஜ் | ஜாதி | : | |
| த/பெ | : | ராமன் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | குரும்பபட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 63 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.03.2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் குரும்பபட்டியில் குடியிருந்துகொண்டு விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 14.09.2022 அன்று மாலை 04.00 மணியைபோல குரும்பபட்டியில் உள்ள கருப்பனசாமி கோவில் அருகே உள்ள எனது தோட்டத்தில் நான் நின்றுகொண்டிருந்தபோது ஆஜர் எதிரி பிரபாகரன் அரிவாளை எடுத்துக்கொண்டு வந்து என்னுடைய வலது புற காரை எழும்பு மற்றும் அதற்கு மேற்புறத்தில் ஒரு வெட்டும், அதன்பிறகு என் தலையில் ஆஜர் எதிரி வெட்ட வரும்போது நான் வலது உள்ளங்கையில் தேக்கும் போது அரிவாள் எனது வலது உள்ளங்கையில் பட்டு காயம் ஏற்பட்டது. அரிவாளை பின்புறமாக திருப்பி எதிரி முகத்தில் உள்ள இடது பக்க தாடையில் அடித்தில் எனது தாடை எலும்பு உடைந்துவிட்டது. எதிரிக்கும், எனக்கும் ஏற்கனவே எந்த பிரச்சனையும் இல்லை. எதிரி என்னை அரிவாளால் வெட்டும்போது எங்கள் ஊரைச் சேர்ந்த பழனிச்சாமி, சிவமுத்து, முருகன் ஆகியோர் அந்த இடத்தில் இருந்தார்கள். இறந்த ராமன் என்பவரை அடக்கம் செய்வதற்காக வந்துகொண்டிருந்தபோது இந்த எதிரி என்னை அரிவாளால் வெட்டினார். அந்த இடத்தில் இருந்த சிவமுத்து என்பவர் என்னை அவருடைய இருசக்கர வாகனத்தில் வைத்து கன்னிவாடி அரசு மருத்துவமனைக்கு என்னை சிகிச்சைக்காக அழைத்துச்

சென்றார். அங்கு முதலுதவி சிகிச்சை அளித்துவிட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் மேல் சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் ஒரு வார காலம் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது கன்னிவாடி போலிசார் வந்து என்னிடம் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பத்துடன் கூடிய **புகார் வாக்குமூலம் (அ.சா.ஆ.1/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 77/2023**

**Deposition of PW.2 (LW.3)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனிச்சாமி | ஜாதி | : | |
| த/பெ | : | மருதை | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | குரும்பபட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 66 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.03.2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் குரும்பபட்டியில் குடியிருந்துகொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பொன்ராஜ் எனது மாமா மகன். ஆஜர் எதிரி எனது அண்ணன் மகன். எதிரியின் சித்தப்பாவான இறந்த ராமனை அடக்கம் செய்வதற்காக கொண்டு சென்றபோது 14.09.2022 அன்று மாலை 04.00 மணியைபோல நாங்கள் 20 நபர்கள் எங்கள் ஊரில் உள்ள கருப்பனசாமி கோவில் அருகே நின்றுகொண்டிருந்தபோது ஆஜர் எதிரி ஓடினார். எதிரி யாரிடமிருந்து அறுவாளை பிடிங்கி சென்றார் என்று எங்களுக்கு தெரியாது. எதிரியின் பின்னால் நாங்களும் சென்றோம். எனக்கு காலில் நடக்க முடியாத அளவிற்கு பிரச்சனை இருப்பதால் என்னால் ஓட முடியவில்லை. நான் சென்று பார்த்தபோது அந்த இடத்தில் கூட்டமாக இருந்தது. பொன்ராஜுக்கு வலது கழுத்துக்கு அருகில் ரத்தமாக இருந்தது. கையிலும் ரத்தம் இருந்தது. அதன்பிறகு நான் பொன்ராஜை திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சென்று பார்த்தேன். அவர்களுக்குள் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. அதை பற்றி நான் கேட்டுக்கொள்ளவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor